**செ. கு. எண்**:430

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 1 .12.2012

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியாளர் திருமதி பூஜா குல்கர்ணி அவர்கள் இன்று (1.12.2012) தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, சென்னை பெங்களூர் நெடுஞ்சாலையில், அவரது வாகனம் அரசுப் பேருந்துடன் மோதியதில், அவருடன் பயணம் செய்த தபேதார் திரு முனிராஜு அவர்கள் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திரு முனிராஜு அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில், மாவட்ட ஆட்சியர் திருமதி பூஜா குல்கர்ணி, துணை வட்டாட்சியர் திரு ஜெய்சங்கர் மற்றும் வாகன ஓட்டுநர் திரு சிவானந்தம் ஆகியோர் பலத்த காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு முனிராஜு அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**